## தேசிய சேமிப்பு வங்கி - 2014

தேசிய சேமிப்பு வங்கியினதும் (''வங்கி'') வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனியினதும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச் சட்டத்தின் 37 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. வங்கியின் 15 கிளைகளின் கணக்காய்விற்கு 15 பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்களினால் உதவி பெறப்பட்டது. துணைக்கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் துணைக்கம்பனிகளின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்களால் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம் - வங்கி**

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய சேமிப்பு வங்கியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் அதன் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**அபிப்பிராயம் - தொகுதி**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய சேமிப்பு வங்கியினதும் அதன் துணைக்கம்பனியினதும் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலையும் அதன் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) வங்கியானது மீளாய்வாண்டிற்கான பங்குலாபமாக திறைசேரிக்கு ரூபா 4,000 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது. திறைசேரி செயலாளரால் வழங்கப்பட்ட 2010 ஏப்ரல் 29 ஆம் திகதிய எம்ஓஎவ்/எவ்எம்ஏயூ/வரி/பங்கிலாபம் ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், பங்கிலாப பொடுப்பனவு வரிக்கு பின்னரான இலாபங்களில் குறைந்தது 30 சதவீதம் அல்லது உரிமை மூலதனத்தின் 15 சதவீதம் எது உயர்வாக உள்ளதோ அதில் இருக்கவேண்டும். அதாவது, வங்கியானது மேற்குறிப்பிட்ட கடிதத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு முரணாக ரூபா 510.96 மில்லியன் மேலதிக கொடுப்பனவுகள் செய்திருந்தது. அதன்விளைவால், வங்கியின் உரிமை மூலதனம் மற்றும் சொத்துக்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 510.96 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 4,131,738 பெறுமதியான பௌதீகரீதியாக கிடைக்ககூடிய நிலையான சொத்துக்கள் பௌதீக மெய்மையாய்வு தாளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை அதேநேரம் நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்ட ரூபா 14,290,872 தொகையான நிலையான சொத்துக்கள் கிளைகளில் பௌதீக ரீதியாக கிடைத்திருக்கவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிலையான சொத்துக்களின் உண்மைத்தன்மை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2.2.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

பொதுப் பேரேட்டில் காட்டப்பட்ட தொகைக்கும் உரிய தரப்பினரிடமிருந்து பெற்ற பட்டோலைகள்/ முறைமைகள்/ உறுதிப்படுத்தல்கள் என்பவற்றில் காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் பின்வரும் விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| விடயம் | பொதுப் பேரேட்டின் படி தொகைகள் | தொடர்புபட்ட பட்டோலைகள்/ முறைமைகள்/ உறுதிப்படுத்தல்கள் படி தொகைகள் | வேறுபாடுகள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| அடவு முற்பணங்களில் பதிவழிக்கப்பட்ட வட்டி | 1,444,112,514 | 1,436,000,000 | 8,112,514 |
| அடவுபிடித்தல் மூலதன வருமதிகள் | 33,195,655,836 | 33,193,638,670 | 2,017,166 |
| அடவுபிடித்தல் வட்டி வகுமதிகள் | 4,988,985,574 | 4,562,264,731 | 426,720,843 |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் - மூலதனம் | 152,428 | 95,652 | 56,776 |
| தபால் மா அதிபர் நாயக தேறிய மீதி | 98,547,448 | 121,485,722 | 22,938,274 |

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்பாடற்ற கணக்குகளில் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய ரூபா 688,955,417 தொகையில், ரூபா 349,747,209 தொகை தெளிவுபடுத்தாமல் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோசடியான மீளெடுப்புகள் மற்றும் காசாளரின் குறைவுகள் முறையே ரூபா 26,533,088 மற்றும் ரூபா 1,510,900 ஆக உள்ளன், அவற்றில் ரூபா 17,638,522 மற்றும் ரூபா 1,400,000 முறையே ஒரு ஆண்டு மற்றும் மூன்று ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடைநிறுத்தப்பட்ட மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய தரப்பினரிடமிருந்து பெற வேண்டியவை முறையே ரூபா 5,124,716 மற்றும் ரூபா 20,467,466 ஆக உள்ளன், அவற்றில் ரூபா 3,640,444 மற்றும் ரூபா 8,238,233 முறையே ஐந்து ஆண்டு மற்றும் மூன்று ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(ஈ) வைப்பு தெளிவாக்கல் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் என்பவற்றில் காணப்பட்ட முறையே ரூபா 2,699,061 மற்றும் ரூபா 3,522,755 ஆன மீதிகள் தீர்ப்பனவு செய்யப்படாமல் மூன்று ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு | கணக்கொன்று வழமையில் செயலற்றிருந்தால் அத்தகைய கணக்கில் இருந்த பணம் "கோரப்படாத வைப்புக்கள் ஒதுக்கத்திற்கு" மாற்றப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், வங்கி 2007 இலிருந்து இந்த ஏற்பாடுடன் இணங்கியிருக்காததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கோரப்படாத வைப்புக்கள் ரூபா 3,394,845,461 ஆக இருந்தது. |
| (ஆ) 2000 இன் 38 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | வங்கியானது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்படாமல் அதன் சொந்த நிதிகளில் 2014 ஆம் ஆண்டிற்கான உழைக்கும் போதே செலுத்தும் வரியாக ரூபா 58,108,398 தொகையை செலுத்தியிருந்தது. |
| (இ) 2007 இன் 10 இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட 2006 இன் 10 இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | 97 சந்தர்பங்களில் 6 கிளைகளால் வாடிக்கையாளரிடமிருந்து அவர்களுடைய வங்கிக் கணக்கு திறக்கும் போது பிரகடன கூற்றுக்கள் விண்ணப்பங்களுடன் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 5.2.4 ஆம் பிரிவு | நிதி ஆண்டு தொடங்குவதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக வரைபு பாதீடொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் வங்கியானது கடந்த ஐந்து ஆண்டுகளிற்கான வருடாந்த பாதீட்டிற்காக சபை அங்கீகாரம் பெறுகின்ற போது இந்த வேண்டுகையுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (ii) 5.2.5 ஆம் பிரிவு | அடுத்துவரும் ஆண்டு தொடங்குவதற்கு முன்னர் குறைந்தது 15 நாட்களிற்கு முன் இயக்குனர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட இறுதி நாளதுவரையாக்கப்பட்ட பாதீட்டின் பிரதிகள் உரிய அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி என்போருக்கு முன்வைக்கப்பட வேண்டும். இருந்த போதிலும், வங்கியானது 2014 சனவரி 29 இல் 2014 ஆம் ஆண்டிற்காக பாதீட்டை முன்வைத்திருந்தது. |

(உ) 2006 ஒக்தோபர் 5 ஆந் திகதிய 6 ஆம் இலக்க சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட 2006 சனவரி 25 ஆந் திகதிய 8 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மையின் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள்

| | |
|---|---|
| (i) வழிகாட்டல். 2.14.1 | அமைச்சரவை நியமித்த கொள்வனவு குழு ரூபா 100 மில்லியனை விட அதிகமாக அல்லது சமமாக வழங்கிய ஒப்பந்தங்களை அங்கீகரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், இது ரூபா 127 மில்லியனிற்காக பாதுகாப்பு சேவை ஒப்பந்தங்களை அமுலாக்கம் செய்யும்போது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) வழிகாட்டல் 2.12 | கொள்வனவு குழு மற்றும் மதிப்பாய்வு குழுவின் சகல உறுப்பினர்களும் முதலாவது கூட்டத்தில் குறிப்பிட்ட படிவத்தில் வெளிப்படுத்தலை கைசாத்திடப்பட வேண்டியதுடன் அத்தகைய வெளிப்படுத்தல்கள் குறைந்தது ஐந்து ஆண்டு காலத்திற்காக பாதுகாக்கப்பட வேண்டும் எவ்வாறாயினும், இது ஆறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 53,262,117 பெறுமதியான ஒப்பந்தங்கள் தொடர்பில் இணங்கியிருக்கவில்லை. |
| (iii) வழிகாட்டல் 8.9.1(ஆ) | ஒப்பந்த பெறுமதி ரூபா 500,000 ஐ விஞ்சும் போது முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் ரூபா 448,425,067 பெறுமதியான பொருட்களின் கொள்வனவிற்கான 140 சந்தர்ப்பங்களில் இந்த வேண்டுகை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக வங்கி மற்றும் தொகுதியின் செயற்பாடுகள் முறையே முன்னைய ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் ரூபா 2,279 மில்லியன் மற்றும் ரூபா 2,669 மில்லியன் நேரொத்த வரிக்கு முந்திய தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 10,472 மில்லியன் மற்றும் ரூபா 10,764 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய இலாபத்தை விளைந்திருந்தது, ஆதலால், வங்கி மற்றும் தொகுதியின் நிதிசார் விளைவுகளில் ரூபா 8,193 மில்லியன் அல்லது 359 சதவீதம் மற்றும் ரூபா 8,095 மில்லியன் அல்லது 303 சதவீதமான முன்னேற்றமொன்றைக் காட்டுகின்றது. இது மீளாய்வாண்டின் போது வியாபாரத்திற்காக நடைபெற்ற நிதி முதலீடுகளின் கைதவிர்ப்பு மற்றும் முதலீடுகளின் கைதவிர்ப்பு மீது தேறிய வட்டி எல்லை, உழைத்த இலாபம் அதிகரித்தமை இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

**3.2. பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறிப்பிடத்தக்களவு கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்ட சில முக்கியமான வங்கி கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்படுகின்றது.

| | | துறை விகிதம் | 2014 | 2013 |
|---|---|---|---|---|
| (அ) | இலாபத்தன்மை விகிதம் | | | |
| | (i) சராசரி பங்குடைமையாளர் நிதிகள் (உரிமை) மீதான வருமானம் (ஆர்ஓஈ) (சதவீதம்) | 14.34 | 30.2 | 5.1 |
| | (ii) சராசரி சொத்துக்கள் மீதான வருமானம் (ஆர்ஓஏ) (சதவீதம்) | 2.19 | 1.5 | 0.4 |
| | (iii) தேறிய வட்டி எல்லை (சதவீதம்) | 3.63 | 3.0 | 1.7 |
| (ஆ) | போதிய மூலதன விகிதம் | | | |
| | (அ) மொத்த சொத்துக்களிற்கு உரிமை மூலதனம் (தடவைகளின் எண்ணிக்கை) | கிடைக்கவில்லை | 1:33.51 | 1:29.45 |
| | (ஆ) போதிய மூலதனம்- தட்டு I (சதவீதம்) | 23.25 | 20.5 | 18.5 |
| | (இ) போதிய மூலதனம்- தட்டு II (சதவீதம்) | 20.62 | 19.0 | 16.7 |
| (இ) | திரவ விகிதம் | | | |
| | திரவச் சொத்து விகிதம் (சதவீதம்) | 67.76 | 91.5 | 92.7 |

* இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கிகள் தொடர்பிலான 10 ஆண்டுகள் வருடாந்த சராசரி புள்ளிவிபரங்கள்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

சராசரி சொத்துக்கள் மீதான வருமானங்கள் மற்றும் தேறிய வட்டி எல்லை என்பன சராசரி அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கி விகிதமான முறையே ரூபா 2.19 சதவீம் மற்றும் 3.63 சதவீதத்தை விட குறைவாக இருந்த முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது முறையே 275 சதவீதம் மற்றும் 76 வீதத்தால் அதிகரித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1. செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் போது வங்கியின் செயற்பாடுகளின் செயலாற்றல் கீழே தரப்படுகின்றன.

| | 2014 | 2013 |
|---|---|---|
| கிளைகளின் எண்ணிக்கை | 236 | 229 |
| தபாலக கிளைகளின் எண்ணிக்கை | 4,063 | 4,063 |
| கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை (மில்) | 18.3 | 17.9 |
| ஏரீஎம் களின் எண்ணிக்கை | 260 | 247 |
| பாடசாலை வங்கிப் பிரிவுகள் | 2,287 | 1,723 |

மீளாய்வாண்டின் போது ஏழு கிளைகள் புதிதாக தாபிக்கப்பட்டிருந்ததுடன் கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை ஏறத்தாழ 400,000 அதிகரித்திருந்ததுடன் ஏரீஎம் வலையமைப்புக்கள் மீளாய்வாண்டின் போது 247 முதல் 260 வரை அதிகரித்திருந்தது.

(ஆ) கிளைகளின் இலாபத்தன்மை

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i 2014 ஆம் ஆண்டின் போது 42 கிளைகள் மற்றும் 02 பிரிவுகளால் ஏற்பட்ட மொத்த நட்டங்கள் ரூபா 242,077,891 ஆக இருந்தது.

ii 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கடனின் இலாபம் மற்றும் சர்வதேச பிரிவு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 544,785,829 மற்றும் ரூபா 59,506,261 அல்லது முறையே 40 சதவீதம் மற்றும் 39 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

iii ‘‘றிதிரேக்கா’’ மற்றும் ஈ- வங்கியியல் பிரிவுகள் என்பவற்றின் தொடர்ச்சியான நட்டங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 872,263 மற்றும் ரூபா 3,403,373 அல்லது முறையே 02 சதவீதம் மற்றும் 10 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 4.2. சர்வதேச பிணைமுறி வழங்கல்- 2013 மற்றும் 2014

2012 திசெம்பர் 19 ஆந் திகதிய 12/1767/504/163 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் செயற்திட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான கடன் வழங்கும் நோக்கத்திற்காக ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் தொகையான சர்வதேச பிணைமுறியை வழங்குவதற்கு அமைச்சரவை அதன் அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. இதன்படி, வங்கியானது வருடாந்தம் 8.875 சதவீதம் மற்றும் 5.15 சதவீதம் வட்டி வீதத்தில் முறையே 2013 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 750 மில்லியன் மற்றும் 2014 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 250 மில்லியன் பெறுமதியான சர்வதேச பிணைமுறிகளை வழங்கியிருந்தது. அமைச்சரவை தீர்மானம் மற்றும் வங்கியால் வழங்குகின்ற விஞ்ஞாபனம் என்பவற்றின் பிரகாரம், ஐ.அ.டொலர் பெயரிடப்பட்ட கடன்களில் 25 சதவீத்தையும் மற்றும் இலங்கை ரூபா பெயரிடப்பட்ட கடன்களில் கடன்களில் 25 சதவீதத்தையும் இலங்கை அபிவிருத்தி பிணைமுறிகளில் செயற்படுத்தப்பட்ட பிணைமுறிகளில் 50 சதவீத்தையும் முதலீடு செய்வதற்கு நெறிப்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. இலங்கை அபிவிருத்தி பிணைமுறிகளில் ஐ.அ.டொலர் 750 முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அமைச்சரவை தீர்மானம் மற்றும் வங்கியால் வழங்குகின்ற விஞ்ஞாபனங்கள் என்பவற்றுடன் இணங்காமல், 2014 திசெம்பர் 31 வரை திறைசேரி உண்டியல்களில் ரூபா 48,812 மில்லியன் அல்லது ஐ.அ.டொலர் 375 மில்லியனில் 50 சதவீதம் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், 2013 ஆம் ஆண்டில் பெறப்பட்ட பிணைமுறிகளில் டொலர் பெயரிடப்பட்ட மற்றும் இலங்கை ரூபா பெயரிடப்பட்ட கடன்களாக ஐ.அ.டொலர் 177.3 மில்லியன் மற்றும் ரூபா 25,097.3 மில்லியன் கடன் தொகையை வழங்குவதற்கு அனுமதிபெறப்பட்டிருந்தது, வங்கியானது அங்கீகாரத்தைக் கருத்திற்கொள்ளாமல் அதன் சொந்த நிதிகளிலிரந்து ஐ.அ.டொலர் 69.8 மில்லியன் மற்றும் ரூபா 12,012.2 மில்லியனை பணவளிப்புச் செய்திருந்தது.

ii. 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பிணைமுறி பெறுகைகளின் முழுத் தொகையும் வங்கியால் வழங்குகின்ற விஞ்ஞாபனத்தின் வேண்டுகையை கருத்திற்கொள்ளாமல் திறைசேரி பிணைமுறிகளில் முதலீடு செய்திருந்தது. ஐ.அ.டொலர் 51.3 மில்லியன் மற்றும் ரூபா 5,000 மில்லியன் கடன் தொகை வழங்குவதற்கு அனுமதி பெறப்பட்டிருந்த போதிலும் வங்கி பெறுகைகளில் எந்தவொரு கடனையும் பணவளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.3. புதிய கிளைகளின் நிர்மாணங்களிலுள்ள தாமதங்கள்

பாணந்துறை, பம்பலபிட்டிய, கல்கிசை, நுகேகொடை, கதிர்காமம் மற்றும் நீர்கொழும்பில் உள்ள ஆறு காணி வங்கி கிளைகளின் நிர்மாணிப்பிற்காக 2008, 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், நிர்மாண வேலைகள் 2014 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், 2014 ஆம் ஆண்டிலும் அந்த வங்கி கிளைகளை செயற்படுத்துவதற்கு வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்களிற்காக ரூபா 7,545,000 தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்குமாயின் செலுத்தப்பட்ட வாடகை கொடுப்பனவை சேமித்திருக்க முடியும்.

## 4.4 கடன் நிர்வாகம்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2014 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் செயற்பாடற்ற கடன்கள் என்பவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கடன் வகை | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமை | | | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | செயற்பாடற்ற கடன்கள் | | மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | செயற்பாடற்ற கடன்கள் | |
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை |
| | | ரூபா (மில்) | | ரூபா (மில்) | | ரூபா (மில்) | | ரூபா (மில்) |
| அலங்கார கடன்கள் | 97 | 83 | 7 | 5 | 83 | 66.3 | 6 | 4.22 |
| ஓட்டோ கடன்கள் | 9,516 | 787 | 299 | 30 | 297 | 301.56 | 2 | 1.07 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வர்த்தக கடன்கள் | 1 | 1,000 | - | - | 2 | 1,192.96 | 0 | 0 |
| வெளிநாட்டு கடன்கள் | 243 | 364 | 49 | 73 | 233 | 387.02 | 61 | 111.34 |
| அரசாங்க கடன்கள் | 36,454 | 24,257 | 1,154 | 651 | 31,133 | 21,112.5 | 1,462 | 813.89 |
| வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன்கள் | 30,344 | 23,080 | 3,117 | 1,623 | 31,034 | 22,962.4 | 4,116 | 2,172.77 |
| வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன்கள் - மிஹிந்து | 3 | 2 | 2 | 1 | 4 | 3.99 | 3 | 1.8 |
| என்எச்டி –ஜன செவன | 7 | 3,576 | - | - | 5 | 2,476.00 | 0 | 0 |
| உத்தரவாதங்கள் மீதான தனிப்பட்ட கடன்கள் | 60,051 | 13,539 | 3,047 | 355 | 30,488 | 5,440.63 | 1,770 | 175.1 |
| ஈட்டுக்கள் மீதான தனிப்பட்ட கடன்கள் | 165 | 143 | 29 | 36 | 183 | 154.37 | 34 | 37.39 |
| செயற்திட்ட கடன்கள் | 66 | 79,418 | 1 | 30 | 21 | 15,872.5 | 0 | 0 |
| பதவியணியினர் கடன்கள் | 18,072 | 4,309 | - | - | 10,133 | 3,232.94 | 0 | 0 |
| பதவியணியினர் வாகனக் கடன்கள் | 400 | 141 | - | - | - | - | - | - |
| பல்கலைக்கழக உத்தியோகத்தர் வீடமைப்பு கடன்கள் | 291 | 263 | 12 | 11 | 191 | 174.49 | 78 | 6.55 |
| பதவியணியினர் மோட்டார் சைக்கிள் கடன்கள் | 29 | 2 | - | - | - | - | - | - |
| டிரிப்பியாச | 14 | 4 | - | - | - | - | - | - |
| ரட்ட இதுறு கடன்கள் | 742 | 46 | 498 | 26 | - | - | - | - |
| ஏனையவை | 1 | 1,414 | - | - | 574 | 33.32 | 427 | 20.57 |
| **மொத்தம்** | **156,496** | **152,428** | **8,215** | **2,842** | **104,381** | **73,411.15** | **7,959** | **3,344.72** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்பாடற்ற கடன்கள்

2014 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மொத்த செயற்பாடற்ற கடன்களின் பெறுமதி முறையே 1.86 சதவீதம் மற்றும் 4.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. ரூபா 40,928 மில்லியன் தொகையான புதிய செயற்திட்ட கடன்களின் கைதவிர்ப்பு மீளாய்வில், செயற்பாடற்ற கடன் வீதம் 1.86 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(ஆ) அறவிடப்படாத உத்தியோகத்தர் கடன்கள் மற்றும் முற்பணங்கள்

i. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் காலத்தில் அறவிடவேண்டிய கடன்களின் பெறுமதி ரூபா 11,577,369 ஆகும்.

ii 45 இடைநிறுத்தப்பட்ட மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் என்போரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 5,124,718 தொகை 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்றிலுள்ள ரூபா 2,791,077,000 ஆன பதவியணியினர் கடன்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 90,479 மில்லியன் அனுமதிக்கப்பட்ட செயற்திட்ட கடன் மீதிகளில் ரூபா 55,371 மில்லியன் தொகை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு (ஆர்டிஏ) அனுமதிக்கப்பட்ட கடனை பிரதிநிதித்துவப்படுத்தியது. 2014 திசெம்பர் மாத்தின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 11,711 மில்லியன் அல்லது 24 சதவீதம் பணவளிப்புச் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிப்புச் செய்யப்பட்டிருந்த மொத்தக் கடன்கள் ரூபா 49,218 மில்லியனாகும். எவ்வாறாயினும், வங்கியானது செயற்திட்ட நிதிக் கைநூலின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஒவ்வொரு பணவளிப்பிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து எவ்வித பௌதீக முன்னேற்றத்தையும் பெற்றிருக்கவில்லை.

(ஈ) வங்கியானது நெல் கொள்வனவு செய்யும் நோக்கில் 2012 செப்தெம்பர் 06 முதல் 2013 செப்தெம்பர் 02 வரை நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு ரூபா 1,200 மில்லியன் கடன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருக்கின்ற செயற்பாடற்ற கடன் மீதி ரூபா 1,000 மில்லியன் ஆகும். மேலும், உத்தரவாதத்தின் உண்மையான பெறுமதியிலிருந்து ரூபா 64 மில்லியன் விடக் குறைவான திறைசேரி உத்தரவாதம் பெறப்பட்டிருந்தது இதுவும் 2014 திசெம்பர் 31 இல் காலாவதியாகியது.

(உ) வங்கியானது 2013 யூன் 27 இல் இலங்கை நிலமீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 14,227 மில்லியன் கடன் வசதியை அனுமதித்திருந்ததுடன் 2014 திசெம்பர் 31 அளவில் செய்யப்பட்ட மொத்த பணவளிப்புத் தொகை ரூபா 1,600 மில்லியனாக இருந்தது. மேலும், இந்த செயற்திட்டம் ஐந்து ஆண்டுகளிற்குள் முதிர்ச்சியடையும் பிணைமுறி பெறுகைகளின் கீழ் பிரேரிக்கப்பட்ட கடனாக இனங்காணப்பட்டிருந்ததுடன் இது ஒரு ஆண்டு தள்ளுபடி காலம் உள்ளடங்கலாக 10 ஆண்டு திருப்பிச் செலுத்தல் காலத்துடன் வழங்கப்பட்டிருந்தது இதற்கு மேலதிகமாக கடனிற்காக கடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் மற்றும் திறைசேரி உத்தரவாதம் இல்லாமல் ரூபா 1,100 மில்லியன் தொகை இரண்டு பணவளிப்புகளிற்கு செய்யப்பட்டன.

(ஊ) வீடமைப்பு திட்டத்தினை நிர்மாணத்திற்கு வழங்கப்பட்ட செயற்திட்ட கடன்கள்

மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக 20 சதவீத வட்டி வீதத்தில் 1996 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனிக்கு ரூபா 50 மில்லியன் மற்றும் ரூபா 30 மில்லியன் தொகையான இரண்டு கடன்கள் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கடன் 1999 யூலை அளவில் முழுமையாக தீர்க்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) எந்தவொரு தவணைப் பணங்களும் செலுத்தப்படாமல் நிலுவையாக முழுக் கடன் தொகையும் இருந்தது.

(ii) 2004 நவம்பர் 06 இல் உள்ளவாறு மேற்குறிப்பிட்ட கடன்கள் தொடர்பில் வங்கிக்கு செலுத்தப்பட்ட வட்டிகள் முறையே ரூபா 8,524,520 மற்றும் ரூபா 1,546,028 ஆக உள்ளன.

(iii) 2006 மார்ச் 10 இல் எடுக்கப்பட்ட சபை தீர்மானத்தின் பிரகாரம், கடனின் சார்பில் சுவீகரிக்கப்பட்ட காணியின் பரப்பளவு 6 ஏக்கர், 3 றூட் மற்றும் 21.75 பேரச்சாக இருந்தது. உரிய மதிப்பாய்வு அறிக்கைகள் மற்றும் பட வரைவு திட்டங்கள் போன்றவற்றின் பிரகாரம், காணியின் பரப்பளவு 6 ஏக்கர், 2 றூடஸ் மற்றும் 12.8 பேர்ச்சாக இருந்ததுடன் 1 றூட் மற்றும் 8.95 பேர்ச் வித்தியாசம் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(iv) மேற்குறிப்பிட்ட கடன் அறவிடாமையின் விளைவால், 2004 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக்கு கிடைக்கவேண்டிய வட்டி வருமானம் மற்றும் முதல் ரூபா 185,400,000 ஆகும்.

(v) ரூபா 184 மில்லியன் பெறுமதியான மேற்குறிப்பிட்ட காணியின் ஒரு பகுதி இலங்கை கடற்படையால் உடமையாக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 113 மில்லியன் பெறுமதியான காணி வங்கிக்கு சொந்தமாக இருக்கின்றன. எவ்வாறாயினும், வங்கியால் பெறப்பட்ட மதிப்பாய்வு அறிக்கையின் பிரகாரம், காணியின் உண்மைப் பெறுமதி ரூபா 70.3 மில்லியனாக மாத்திரமாக இருந்ததுடன் ரூபா 9.7 மில்லியனான அத்தகைய நட்டம் வங்கியால் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(vi) ரூபா 18.8 மில்லியன் பெறுமதியான மேற்குறிப்பிட்ட காணியின் நான்கு துண்டுகள் 2009 யூன் 2 ஆந் திகதிய 1604/16 ஆம் இலக்க மற்றும் 2011 யூன் 02 ஆந் திகதிய 1708/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடுவதன் மூலம் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டிருந்தது. இதுவரைக்கும், இது தொடர்பில் அரசாங்கம் எந்த நஷ்டஈட்டையும் செலுத்தியிருக்கவில்லை.

(எ) அடைவு முற்பணங்கள்

i. மீளாய்வாண்டின் போது மூன்று பொது ஏலங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 10,457 மில்லியன் பெறுமதியான பல மீட்கப்படாத அடைவு நகைகள் ஏலத்திற்கு விடப்படாது வங்கியின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தன.

iii. வங்கியின் 06 கிளைகால் அடைவ முற்பண கொடுப்பனவில், தங்க வீதம் உயர்வாக காட்டப்பட்டிருந்த தங்க நகைகள் தொடர்பில் 57 சந்தர்ப்பங்களில் ரூபா 13,453,311 தொகையான கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன, ஆனால் பின்னர் அவை 10 இற்கும் 18 இற்கும் இடையில் இருக்க வேண்டுமென கண்டுபிடிக்கப்பட்டதுடன் பௌதீக மெய்மையாய்வு குறைந்த விகிதத்தில் செய்யப்பட்டிருந்தன.

**4.5 முகாமைத்துவ திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 9,762,229 கிரயமான எட்டு கட்டிட பகுதிகள் எவ்வித நிர்மாணங்களும் இல்லாமல் நடைமுறை வேலையில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) வங்கியானது 2014 ஆம் ஆண்டின் போது செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பின்வரும் இலக்குகளை அடைவதற்கு தவறியிருந்தது என அவதானிக்கப்பட்டது.

| விடயம் | இலக்கு | எய்தல் | எய்தப்படாமை |
|---|---|---|---|
| வைப்புக்களில் வளர்ச்சி | 14 சதவீதம் | 10 சதவீதம் | 4 சதவீதம் |
| மொத்த வைப்புக்கள் (ரூபா பில்) | 650 | 554 | 96 |
| சொத்துக்கள் மீதான வருமானம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1.8 | 0.18 | 1.62 |
| ஒரு ஊழியருக்கான வைப்பு (ரூபா மில்) | 206 | 165 | 41 |

### 4.6 மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

ரூபா 40.09 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான அடைவு முற்பணங்கள் கீழே காட்டப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டுடன் இணங்காமை காரணமாக பொத்துவில் கிளையால் குறைந்த கரட் தங்க நகைகள் வழங்கப்பட்டிருந்தது.

நாளின் இறுதியில் முகாமையாளரால் அடைவு பிடிக்கப்பட்ட நகைகளின் நாளாந்த பௌதீக மெய்மையாய்வு நடாத்தப்படவில்லை.

i. 18 வயதிற்கு குறைந்த நபர்களிற்காக (சிறுபராயம்) வழங்கப்பட்ட அடைவு பிடித்தல் வசதிகள் மீதான முற்பணங்கள்.

ii. அடைவு பிடிக்கப்பட்ட நகைகளின் உரிமையாளர் தொடர்பில் சான்றுபடுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை.

iii. முன்னங்கீகாரம் இல்லாமல் அடைவு முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தது.

### 4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 சனவரி 29 இல் வங்கியால் சிற்றம்பலம் வீதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 35 மில்லியன் பெறுமதியான 0.479 ஹெட்டெயர் பரப்பளவுள்ள காணியை இலங்கை கடற்படை சுவீகரித்திருந்தது. 2009 யூன் 08 இல் இலங்கையின் சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமாணியில் காணியின் சுவீகரிப்பு அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் இழப்பீட்டிற்கான பரிசோதனை 2012 யூன் 28 இல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கொழும்பு பிரதேச செயலகம் அவற்றின் மீதான இழப்பீடு மற்றும் வட்டி பரிசோதனை திகதியிலிருந்து மதிப்பீட்டில் செய்யப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதிவரையும் எந்தவித இழப்பீடும் அவற்றின் மீதான வட்டியும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கிக்கான 18 மாடி கட்டிடமொன்றைக் கட்டுவதற்கு 2008 இலிருந்து ரூபா 35,228,367 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இந்த பகுதி உயர் பாதுகாப்பு வலயத்தின் கீழ் வருகின்றதன் காரணமாக மீளாய்வாண்டிலோ அல்லது முன்னைய ஆண்டிலோ எந்தவொரு நிர்மாணிப்பும் இல்லாமல் நடைமுறை வேலையாக கணக்கில்

காட்டப்பட்டிருந்தது. ஆகவே அவற்றின் மீது ஏற்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக அமைந்திருந்தது.

**4.8 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

வங்கியானது எட்டு காணிகளில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக காணிகளின் உரிமையை வங்கிக்கு பெறாமல் ரூபா 86,935,625 தொகையை ஏற்படுத்தியிருந்தது.

**4.9 முதலீடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 44 விலைகூறப்பட்ட கம்பனிகளின் பங்குகளிலுள்ள ஒட்டுமொத்த முதலீட்டுக் கிரயம் ரூபா 7,186,057,572 ஆகும். அந்த 44 விலைகூறப்பட்ட கம்பனிகளில் 32 இன் சந்தைப் பெறுமதி 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,102,083,766 பெறுமதியில் வீழ்ச்சியடைந்திருந்தது. இதன்படி, முதலீடு செய்யப்பட்ட ஒட்டுமொத்த பங்குகளின் சந்தைப் பெறுமதி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,102,083,766 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) 14 விலைகூறப்பட்ட கம்பனிகளில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து எவ்வித வருமானங்களும் இல்லாததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,086,087,759 ஆக இருந்தது. மேலும், வங்கியானது குறைந்த சந்தைப் பெறுமதிகளுடன் 07 விலைகூறப்பட்ட கம்பனிகளில் ரூபா 777,483,527 ஐ முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக அவற்றின் மீது எவ்வித வருவாய்களையும் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டின் போது வீழ்ச்சியடைந்த சந்தை பெறுமதியுடன் 18 விலைகூறப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் மீளாய்வாண்டின் போது ரூபா 876,835,323 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது மூன்று விலைகூறப்பட்ட கம்பனிகளில் ரூபா 48,828,710 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் இதன்மீது பங்குலாபம் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மொத்த பிடித்துவைத்தல் காலத்திற்கான (22 ஆண்டுகள்) ரூபா 10,000,000 ஆன முதலீடு நம்பிக்கை பொறுப்பு மூலதன நிதியத்தின் (சீஓஎம்) மொத்த வருமானம் வருடாந்தம் 5.09 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 9,159,245 மாத்திரமாக இருந்தது. கடந்த 22 ஆண்டுகளின் போது நிலையான வைப்புக்களிற்கு வங்கியால் செலுத்தப்பட்ட சராசரி வட்டி வீதம் வருடாந்தம் 12.75 சதவீதம் தொடக்கம் 10.77 சதவீமான வீச்சிலிருந்தன. வாடிக்கையாளர்களிற்கு செலுத்தப்பட்ட சராசரி வட்டி வீதங்களை கருத்திற்கொள்கையில், வங்கியானது ரூபா 15,766,833 முதல் ரூபா 11,691,333 வரை வீச்சிலான அலகு நம்பிக்கைப் பொறுப்பின் வருவாயினை இழந்திருந்தது.

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான வங்கியின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 3,927 ஆக இருந்ததுடன் வங்கியானது 2,815 நிரந்தர பதவியணி, 162 பயிற்சியாளர்கள் மற்றும் 381 ஒப்பந்த அடிப்படை பதவியணி என்போர் உள்ளடங்கலாக 2014 ஆம் ஆண்டின் போது 3,358 ஊழியர்களை ஈடுபடுத்தியிருந்தது. மேலும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 634 வெற்றிடங்களும் 65 மிகை பதவியணியினரும் காணப்பட்டன. எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 வரையிலும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கியானது எழுத்துப் பரீட்சைகளை நடாத்துவதன் மூலம் 2005 வரை வங்கியியல் உதவியாளர்களை சேர்த்திருந்த போதிலும், வங்கியானது எழுத்துப் பரீட்சைகளை நடாத்துவதற்குப் பதிலாக நேர்முக பரீட்சை அடிப்படையில் 2006 முதல் 2014 வரை 1,211 வங்கியியல் உதவியாளர்களை சேர்த்திருந்தது. அவ்வாறு சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் தென் மாகாணத்தில் 47 சதவீதத்தையும் மேல் மாகாணத்தில் 23 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியது.

(இ) வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் பதவி வெற்றிகரமான திட்டம் கிடைக்காமை மற்றும் 2011 இலிருந்து வங்கியின் நியமனக் குழு செயற்பாடமை காரணமாக பல ஆண்டுகளாக வெற்றிடமாக இருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது வங்கியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன்கள் மற்றும் முற்பணங்களின் கொடுப்பனவும் தீர்ப்பனவும்
(ஆ) வங்கி செயற்பாடுகள் மீதான ஆவணப்படுத்தல்
(இ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு
(ஈ) அடைவு பிடித்தல் முறைமை மீதான கட்டுப்பாடு
(உ) கிளைச் செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகள்